RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21215

OPEN ACCESS

# பெரியபுராணம் கண்ணப்ப நாயனார் புராணத்தில் பல்வகை மெய்ப்பாடுகள்

**க. கோவிந்தராஜ்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), பெரியநாயக்கன் பாளையம்,கோவை-20, இந்தியா

# Periyapuranam Kannappa Nayanar Puranam has various truths

**K. Govindaraj** [a, *]

[a] Department of Tamil, Sri Ramakrishna Mission Vidyalaya College of Arts and Science (Autonomous) Periyanaickenpalayam, Coimbatore-20, India.

* Corresponding Author:
govindarajpn@gmail.com

Received : 04-02-2021
Revised : 17-04-2021
Accepted : 21-04-2021
Published : 30-04-2021

Check for updates

**ABSTRACT**

Kannappanayanar Puranam is the 16th Nayanmar out of 63 Nayanmars in Periyapuranam. Kannappa Nayanar Puranam is a repository of truth from the 650th to 830th of the total 4281 songs in Periyapuranam. Kannappa Nayanar Puranam is composed of 230 hymns. While introducing his country, Sekizhar proudly shows his country as a city full of good resources which is praised by all the poets. When Kannapar displays his military prowess and when he expresses his love for seeing the Lord on Kalathi Hill, the Marutkai truth of wonder is revealed. This article examines the nature of the truths mentioned by Tolkappiyar in these songs.

**Keywords:** Kannappanayanar Puranam, Nayanmar, Tolkappiyar, Sekizhar

## முன்னுரை

பெரியபுராணத்தில் 63 நாயன்மார்களில் 16 ஆவது நாயன் மாறாக கண்ணப்பநாயனார் புராணம் அமைந்துள்ளது. பெரியபுராணத்தில் மொத்தம் 4281 பாடல்களில் 650-வது பாடலிலிருந்து 830 பாடல் வரை கண்ணப்ப நாயனார் புராணம் மெய்ப்பாட்டு களஞ்சியமாக காணப்படுகின்றது. கண்ணப்ப நாயனார் புராணம் 230 பாடல்களில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பாடல்களில் தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடுகள் எத்தன்மையில் வெளிப்பட்டுள்ளன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## நாவலர் புகழ்ந்து போற்றும் நல்வளம் மிக்க நாடு

பொத்தப்பி என்ற நாட்டில் உடுப்பூர் என்ற ஊரில் வேடரின் மகனுக்கும் தந்தைக்கும் நீண்ட நாள் மகப்பேறு இல்லாமல் இருந்தது அவர்களுக்கு முருகப்பெருமான் அருளால் ஒரு குழந்தை பிறந்தது அந்த குழந்தைக்கு திண்ணன் என்று பெயரிட்டனர். தன்னுடைய நாட்டை அறிமுகப்படுத்தும் பொழுது புலவர்கள் எல்லாம் புகழ்ந்து போற்றுகின்ற நல்ல வளங்கள் நிறைந்த ஊர் என்று தன்னுடைய நாட்டை பெருமிதமாக வெளிப்படுத்தி காட்டுகிறார் சேக்கிழார்.

## விருப்பம் என்னும் மெய்ப்பாட்டு பருவம்

திண்ணனார் வளர்ந்ததும் தக்க பருவத்தில் படைக்கலப் பயிற்சியைப் பெற்று சிறந்த அவருக்கு 16 வயது ஆகியது. பொத்தப்பி என்னும் நாட்டின் சிறுவர்கள் அங்கு உள்ள புலிக்குட்டி களுடனும் யானை கண்களுடனும் விளையாடி மகிழ்ந்தனர் அதுவும் விரும்பி விளையாடினர். இதனை,

"வன் புலிக் குருளையோடும்

வயக் கரி கன்றினோடும்

புன்றலைச் சிறு மகார்கள் புரிந்து

உடன் ஆடல் அன்றி

அன்புறு காதல் கூர

அணையும் மான் பிணைகளோடும்

இன்புற மருவி ஆடும்

எயிற்றியர் மகளிர் எங்கும்"

என்னும் பாடல் வழியாக அறியமுடிகின்றது (Sekkilhar, 1934).

இந்த காட்சியின் வழியாக கல்வி எனும் பெருமிதம் மெய்ப்பாடு வெளிப்பட்டு நிற்கின்றது. அதுவும் வேட்டுவ சிறுமியர்கள் பெண் மானுடன் இன்பத்துடன் கூடி விளையாடுகின்ற காட்சிகள் உவகை மெய்ப்பாட்டை காட்டுகின்றது. வேட்டுவ சிறுவர்கள் மட்டுமல்ல வேடர் கூட்டங்கள் படைக் கலத்துக்கு அஞ்சாமல் செயல்படுவார்கள் என்னும் சிந்தனையில் பெருமிதம் என்னும் மெய்ப்பாடு தோன்றுகின்றது.

இந்த நாட்டு மறவர்கள் அச்சமும் எக்காலத்துக்கும் அடையாதவர்கள் என்பதை சொல்லுகின்ற பொழுது பெருமிதம் ஓங்கி நிற்கின்றது. அதுமட்டுமன்றி திண்ணனாரை பெற்றெடுத்த பிறகு பெற்ற தாயின் உள்ளம் வகையில் மகிழ்ந்து பொங்குகிறது கண்களில் நீர் ததும்புகிறது. சிறிய குழந்தையாக திண்ணனார் இருந்து சிறுவர்களுடன் விளையாடும் என்ற அழகிய காட்சியைக் கண்டு பெருமிதம் கொள்கிறாள் தாய் (Sekkilhar, 1934).. இதனை

"மாசறு கோலம் காட்டி

மறுகிடை ஆடும் நாளில். 21 தண் மலர் அலங்கல் தாதை

தாய் மனம் களிப்ப வந்து

புண்ணிய கங்கை நீரில்

புனிதமாம் திருவாய் நீரில்

உண்ணனைந்து அமுதம் ஊறி ஒழுகிய

மழலைத் தீஞ் சொல்

வண்ண மென் பவளச் செவ்வாய்

குதட்டியே வளரா நின்றார்" (Sekkilhar, 1934).

## பெருமிதம் கொள்ளத்தக்க குறிஞ்சி நில தலைவனும் தலைவியும்

"அடிச் சிறு தளிரால்

சிந்தி அருகுறு சிறுவரோடும்

குடிச் செறு குரம்பை எங்கும்

குறு நடை குறும்பு செய்து"

என்னும் காட்சிகளின் மூலமாக பல்வேறு மெய்ப்பாடுகளை தாயின் வழியாக அமைத்துக் காட்டுகிறார் சேக்கிழார் (Sekkilhar, 1934)..

## வியப்பைத் தரும் திண்ணனாரின் தலைமை

நாகர் வேட்டையாடும் காட்டில் காட்டுப்பன்றிகளும் கரடிகளும் புலிகளும் பிற விலங்குகளும் சோலையை அழிக்கத் தொடங்கின. திணை புனங்களை அழிக்கத் தொடங்கின. இந்த செய்தியை ஊர் மக்கள் நாகர் அவரிடம் வந்து கூறினர். நாகன் தனக்கு வயதாகி விட்டது அதனால் தன் மகனை தலைவனாக ஏற்றுக் கொள்ளும்படி கூறுகிறார். திண்ணனார் வேடரின் தலைவர் ஆனார். இந்த இடத்தில் நகரின் சிறப்பை எடுத்துக் கூறுகின்ற பொழுது வில்லாற்றல் கொண்டவன் சிங்கம் போன்ற சினம் கொண்டவன் குறிஞ்சி நில வாழ்வில் சிறந்த தலைவன் என்று குறிப்பிடுகின்ற பொழுது பெருமிதம் என்னும் மெய்ப்பாடு வெளிப்பட்டு நிற்கின்றது. நாகரின் மனைவியாகிய தத்தை என்பவள் பெண் சிங்கத்தை போன்றவள் என்பதை முச்சிச் அரிப் பிணவு போல்வாள் என்று குறிப்பிடுகிறார் சேக்கிழார். குறிஞ்சி நில தலைவனும் தலைவியும் பொருவருஞ் சிறப்பின் மிக்கார் என்று குறிப்பிடுகின்ற பொழுது வியப்பு என்னும் மெய்ப்பாடு தோன்றுகிறது. புதல்வர்ப் பேறு கொண்டு முருகக் கடவுளுக்கு புகழ் நிறைந்த குரவைக்கூத்து ஆடி பெரிய அணங்காடல் செய்து பெருவிழா செய்தனர். இந்தக் காட்சியிலும் வியப்பை நாம் உணர முடியும்.

## புதுமை நிறைந்த பெருமைமிக்க வீரன் திண்ணனார்

திண்ணனார் வேட்டைக்குச் செல்ல இருப்பதைக் கருதி தெய்வங்களுக்கு வழிபாடு நிகழ்த்தினார். வேடர்களும் வேட்டை நாய்களும் தொடர்ந்து வர திண்ணனார் வேட்டைக்குப் புறப்பட்டார். இங்கே வேடர்களின் மனங்களில் விலங்குகளால் ஏற்படும் அச்சத்தின் நிலைப்பாட்டை உணர முடிகின்றது. ஆனால் திண்ணனாரின் மனம் இரும்பு மனம் ஆக காணப்பட்டது எதற்கும் அஞ்சாத வலிமை உடையவன் என்பதை மேலும் மேலும் பாடல்களின் வழியாக உணரமுடிகின்றது. அரும்பெறல் உலகம் எல்லாம் அளப்பரும் பெருமை காட்டி என்று குறிப்பிடுகின்ற பொழுது வியப்பை அடைய முடிகின்றது. திண்ணனார் புலி முதலான பல விலங்குகளை வேட்டையாடினர். அப்பொழுது ஒரு காட்டுப்பன்றி மேகத்தைப் போல் விரைவாக ஓடியது. அதனை அவர் பின்தொடர்ந்தார். அடர்ந்த காட்டில் வேடர்களும் காடனும் நாணனும் தவிர மற்றவர்கள் பிரிந்து பின்தங்கி விட்டனர். அந்தக் காட்டுப் பன்றி ஒரு மலைச்சாரலை அடைந்தது. தொடர்ந்து பின்தொடர்ந்து திண்ணனார் அதை வீழ்த்தினார். இப்படி அஞ்சாமை வீரனாக திண்ணனார் திகழ்கின்றார் என்று குறிப்பிடுகின்ற பொழுது வியப்பு மெய்ப்பாடு வெளிப்பட்டு விடுகின்றது.

## புதுமை என்னும் வியப்பைத் தரும் காளத்தி மலை

காடனும் நாணனும் அவரை வணங்கி பன்றியை சுட்டு தின்று பசியாறி அந்த வேட்டை காடான இடத்தை அடையலாம் என்றனர். இங்கு தண்ணீர் எங்கே கிடைக்கும் என்று திண்ணனார் வினவினார். நாணன் பக்கத்தில் உள்ள காளத்தி மலையின் அருகில் ஓடும் பொன்முகலி ஆற்றை பற்றி உரைத்தான். அங்கே போவோம் என்று மூவரும் சென்றனர். மூவரும் காளத்தி மலை சாரலை அடைந்தனர். மலைமீது செல்லும் விருப்பம் அவருக்கு உண்டாயிற்று. இந்த இடத்தில் திண்ணனார் ஒரு புதுமையை காணவேண்டும் என்னும் மருட்கை மெய்ப்பாடு வெளிப்பட்டு நிற்கின்றது.

காளத்தி மலை சாரலுக்கு மேலே சென்றால் குடுமித்தேவர் இருப்பார் நாம் வணங்கலாம் என்று நாணன் உரைத்தான். மலைக்கு மேலே செல்லச் செல்ல மனதில் உள்ள பாரம் குறைகிறது என்று கூறினார். பன்றியை இந்த காட்டுத் தீயில் வைத்து வேக வைக்குமாறு சொல்லிவிட்டு மலை மீது நாணனுடன் திண்ணனார் சென்றார்.

## ஆனந்தக் கூத்தாடும் திண்ணனாரின் உணர்வு வெளிப்பாடு

காளத்தி மலையின் மீது உள்ள குடிமித் தேவரை திண்ணனார் கண்டார் இறைவரின் அருள் பார்வை அவர் மீது ஏறியது அளவில்லாத அன்பு பெருக குடுமித் தேவரைக் தழுவிக் கொண்டார். நெடுநாள் பிரிந்திருந்த தன் குழந்தையை தலைவி கொண்ட தாயைப் போல தழுவிக்கொண்டார் உச்சிமோந்து முத்தமிட்டார் நெடுநேரம் பெருமூச்சு விட்டு நின்றார் உடல் புளகம் கொண்டது கண்கள் நீரைப் பொழிந்தன வெயில் இடைப்பட்ட மெழுகைப் போல உருகினார். இந்த காட்சிகளில் மறுகையில் பெருமிதமும் உவகையும் கலந்த மெய்ப்பாட்டு காட்சிகளாக காணமுடிகின்றது. இந்த காட்சியை,

"வீரக் கழல் காலின்

விளங்க அணிந்து பாதம்

சேரத் தொடு நீடு

செருப்பு விருப்பு வாய்ப்பப்

பாரப் பெரு வில் வலம்

கொண்டு பணிந்து திண்ணன்

சாரத் திருத்தாள் மடித்து

ஏற்றி வியந்து தாங்கி".

என்னும் பாடல் அடிகள் மூலமாக வியப்பு என்னும் மெய்ப்பாடு உணரமுடிகின்றது (Sekkilhar, 1934)..

## அளவில்லாத அன்பும் பிரிய மனமில்லாத பற்றும்

காளத்தி மலையில் உள்ள இறைவன் மீது பச்சிலை முதலியவற்றை இட்டவர் யார் என்றார் திண்ணனார். நாணன் சிவகோசரியார் பற்றி உரைத்தான். இந்த கொடிய காட்டில் நீங்கள் தனியாக இருக்கின்றேன் கொடிய விலங்குகள் இங்கு அதிகம் இருக்கின்றது உன்னை பிரிய எனக்கு மனமில்லை. உங்களுக்கும் பசிக்கும். ஆகையால் இங்கு இருக்கும் என்னால் இயலவில்லை என்று கலக்கம் கொண்டார். இந்த இடத்தில் விலங்குகளால் உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என்ற அச்சத்தின் மெய்ப்பாட்டை உணர முடிகின்றது. பன்றி இறைச்சியை தீயில் வாட்டி அதன் சுவையை கண்டு சுவையான பகுதியை எடுத்துக் கொண்டார். திண்ணனாரின் செயல்கள் காரனுக்கும் நான் அனுப்பும் திகைப்பை ஊட்டின. இங்கே மருட்கை என்னும் மெய்ப்பாடு வெளிப்பட்டு காணப்படுகின்றது. பசி இருந்தும் இவர் இந்த இறைச்சியை உண்ணவில்லை இவருக்கு தெய்வ பித்தம் உண்டாகி உள்ளது. இதை தீர்க்க தேவராட்டி அழைத்து வர வேண்டும் என்று எண்ணி அவர்கள் இருவரும் சென்று விட்டனர். இதை திண்ணனார் கண்டுகொள்ளவில்லை.

"அண்ணலைப் பிரிய மாட்டா தளவில் ஆதரவு நீட"

என்னும் அடிகள் மூலமாக அளவில்லாத திண்ணனாரின் அன்பை உணர முடிகின்றது. காளத்தி மலைக்கு புறப்பட்டு சென்ற திண்ணனார் தன் அன்பு வாயில் ஆற்றுநீரை எடுத்துக்கொண்டு இறைவரை நீராட்ட ஆற்று நீரை வாயில் கொண்டு பூக்களை தலையில் பெய்து ஒரு கையில் அம்பையும் வில்லையும் எடுத்துக் கொண்டு காளத்தி மலைக்கு இன்னும் மேலே சென்றார். இந்த காட்சியை

"வளைத்த பொற் செருப்பால் மாற்றி

வாயின் மஞ்சன நீர் தன்னை

விளைத்த அன்பு உமிழ்வார் போல

விமலனார் முடிமேல் விட்டார்"

என்னும் பாடலடிகள் மூலமாக கருணை அன்பு என்னும் மெய்ப்பாடு வடிவங்களை காணமுடிகின்றது (Sekkilhar, 1934)..

திண்ணனார் தம் வாயில் கொணர்ந்த நீரை தம் அன்பையும் இவர் போல விழுந்து பூவைச் சூட்டி நெடுநேரம் பசியுடன் உள்ளீர் இதனை உண்ணும் என்று சொல்லி உண்ண செய்தார். சூரியன் மறைந்தான் இரவு நேரம் வந்துவிட்டது.

## அழுது புலம்பும் சிவகோசரியாரியரின்திருவுள்ளம்

காளத்தி மலை மீது உள்ள இறைவனுக்கு உன்ன இறை உணவு கொடுத்து விட்டு அந்த இறைவனுக்கு பக்கத்திலேயே நின்று கொண்டு காவலை மேற்கொண்டார். விடிந்ததும் திண்ணனார் பிரிய இயலாத உணர்வுடனே பிரிந்து சென்று முதல் நாளைப் போல மீண்டும் இறைச்சியை முதலியவற்றைக் கொண்டு வந்து இறைவனுக்கு படையல் இட்டார். அப்பொழுது இறைவனுக்கு வழக்கம்போல் குடுமித் தேவருக்கு பூசை செய்யும் சிவகோசரியார் அங்கு வந்தார். அங்கு இறைச்சி எலும்பு முதலியவை இருப்பின் அவற்றை அவர் கண்டார். இதுபோன்று செய்தவர் யார் இறைவனை தாங்கள் எப்படி பொறுத்துக் கொண்டேன் என்று வருந்தினார். இங்கே இந்த காட்சி,

"மேவநேர் வர அஞ்சா

வேடுவரே இது செய்தார்

தேவ தேவ ஈசனே

திருமுன்பே இது செய்து

போவதே இவ் வண்ணம்

புகுத நீர் திரு உள்ளம்

ஆவதே எனப் பதறி

அழுது விழுந்து அலமந்தார்".

என்னும் பாடலடிகள் மூலமாக அழுகை என்னும் மெய்ப்பாட்டை உணரமுடிகின்றது (Sekkilhar, 1934).. இறைவனின் இடத்தில் இயல்பான நிலையை கண்டு மாறிய நிலையில் வருத்தம் எனும் நிலையில் அழுகை என்னும் மெய்ப்பாடு இங்கே தோன்றி நிற்கின்றது. சிவகோசரியார் அந்த இடத்தைத் தூய்மை செய்து வழக்கம்போல பூஜை செய்தார் மீண்டும் தங்கள் இருப்பிடத்துக்கு திரும்பினார்.

அதன்பிறகு இறைச்சியை வேட்டையாடிக் கொணர்ந்த திண்ணனார் அதை வழக்கம்போல் இறைவருக்கு இறைச்சி உணவு கொடுத்தார். அப்போது நாணனும் காடனும் திண்ணனார் பற்றி கூறியதை கேட்ட நாகம் தேவதையுடன் வந்து அவரை தெய்வ பித்தன் நீங்கள்தான் தெரிவிக்க வேண்டுமென்று முனைந்தனர் அந்த இருவரின் முயற்சியால் மாற்ற இயலாமல் போயிற்று அதனால் மீண்டும் வீடு திரும்பினர். இவ்வாறு திண்ணனார் நாள்தோறும் இறைவனுக்கு இறைச்சி உணவு தந்து படையலிட்டு வணங்கி வந்தார். சிவகோசரியாரும் நாள்தோறும் திண்ணனார் செய்ததை பார்த்து வருந்தினார். இதை மாற்றிட வேண்டும் என்று சிவகோசரியார் இறைவனிடம் முறையிட்டார்.

## வியப்பைத் தரும் இறைவனின் திருவிளையாடல்

இப்படி ஐந்து நாட்கள் நிகழ்ந்தன. ஐந்தாம் நாள் இரவில் சிவகோசரியாரின் துன்பத்தை நீக்க அவருடைய கனவில் தோன்றி அன்பனே கோயிலில் அசுத்தம் செய்பவன் சாதாரண வேடன் என்று எண்ணாதே. அவனது வடிவம் நம்மிடம் வைத்த அன்பின் வடிவம். அந்த திண்ணனாரின் அறிவு நம்மை அறியும் அறிவு என்பதை உணர வேண்டும். அந்த வேடனின் அன்பான செயல் அனைத்தும் இறைவன் ஆகிய எமக்கு இனியவை இனியவை ஆகும். திண்ணனாரின் அன்பின் திறத்தை நாளை நீ வந்து மறைவாக இருந்தால் உமக்கு புலப்படுத்துவேன் என்று அருள் செய்தார். இந்த காட்சியில் இறைவனின்

அருளை வியந்து சிவகோசரியார் வழியாக மருட்கை என்னும் மெய்ப்பாடு வெளிப்படுகின்றது. இந்த காட்சியை

”அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்

அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவு என்றும்

அவனுடைய செயலெல்லாம் நமக்கு இனிய என்றும்

அவனுடைய நிலை இவ்வாறு அறி நீ என்று அருள் செய்வார்”

என்னும் பாடலடிகள் மூலமாக இறைவனின் திருவிளையாடல் வியப்பை தந்து விடுகின்றது. மறுநாள் வழக்கம் போல் வந்து பூசை செய்து சிவகோசரியார் இறைவனின் பின்பு காட்டுஅருகில் பின்புறமாக மறைந்திருந்தார் (Sekkilhar, 1934).. அன்று விடியலில் வழக்கம்போல் இறைச்சி முதலியவற்றை திண்ணனார் கொண்டு வந்தார். அவர் தொலைவில் வரும் போதே தீய சகுனங்கள் தோன்றின. திண்ணனாரின் அன்பின் திறத்தை புறப்படுவதற்காக இறைவன் தம்முடைய வலது கண்ணில் குருதி வடியமாறு செய்தார். இந்த காட்சியை தொலைவிலிருந்தே கண்ட திண்ணனார் ஓடோடி வந்தார். இறைவன் கண்ணுக்கு தன் கண்ணைத் தோண்டி பொருத்தினார். ஒரு கண்ணில் குருதி நின்றது. மற்றொரு கண்ணிலும் குருதி வழிந்தது. தன்னுடைய இடது கண்ணையும் எடுத்து இறைவனுக்கு பொருத்திட திண்ணனார் எண்ணினார். இந்த காட்சியில் திண்ணனாரின் வழியாக வருத்தம் என்னும் அழுகை மெய்ப்பாடு பீறிட்டு நிற்கின்றது. இறைவனின் அருளும் திண்ணனாரின் அன்பும் படிப்போரை மெய்சிலிர்க்க வைக்கின்றது. இந்த காட்சியை,

“அண்ணலார் திருக் காளத்தி

அடிகளார் முனிவனார்க்கு

திண்ணனார் பரிவு காட்டத்

திரு நயனத்தில் ஒன்று

துண்ணென உதிரம் பாய

இருந்தனர் தூரத்தே அவ்

வண்ணவெஞ் சிலையார் கண்டு வல்

விரைந்து ஓடி வந்தார்.” 169

என்னும் அடிகள் மூலமாக உணர முடியும். மேலும் திண்ணனார் இறைவன் மீது கொண்ட எல்லையில்லாத அன்பை மெய்ப்பாட்டு அடிகளின் மூலமாக உணர்த்திக் காட்டுகிறார் சேக்கிழார். இதனை,

“வந்தவர் குருதி கண்டார்

மயங்கினார் வாயில் நன்னீர்

சிந்திடக் கையில் ஊனும்

சிலையுடன் சிதறி வீழக்

கொந்தவர் பள்ளித் தாமம் குஞ்சி

நின்று அலைந்து சோரப்

பைந்தழை அலங்கல் மார்பர் நிலத்து

இடைப் பதைத்து வீழ்ந்தார்”.

என்னும் அடிகள் மூலமாக நன்கு உணரமுடிகின்றது (Sekkilhar, 1934)..

## கண்ணுக்கு கண் என்னும் அன்பின் உவகை

இறைவனுக்கு இடது கண்ணையும் தோண்டி வைப்பதற்கு முடிவு செய்த நிலையில் முற்பட்டபோது உடனடியாக இறைவன் தோன்றி நில்லு கண்ணப்ப என்று மூன்றுமுறை கூறினார். திண்ணப்பனார் கண்ணப்பனார் ஆனார். சிவகோசரியார் தேவர்களும் இந்த அரிய நிகழ்ச்சியை பார்த்து வியந்தனர் வானத்தில் நின்று பூ மழை பொழிந்தது இவ்வாறு சிவன் அருளைப் பெற்றார் கண்ணப்பனார் இந்த காட்சியில் உவகை பெருமிதம் என்னும் மெய்ப்பாடு வெளிப்படுகின்றது. இறைவனுக்கே தன்னுடைய கண்களை கொடையாக வழங்கிய கண்ணனாரின் திறத்தைக் கண்டு படிப்போருக்கும் மெய்ப்பாடு வெளிப்பட உணரமுடிகின்றது. திண்ணனார் இறைவனுக்கு கண்கள் வழங்குகின்ற பொழுது தன்னுடைய புலன்கள் வருந்த வில்லையாம் புலன் இன்பம் அடைந்ததாம் என்று சேக்கிழார் கூறுகின்றார். இந்த காட்சியில்,

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று அல்லல் நீத்த உவகை நான்கே"

என்னும் தொல்காப்பியரின் வகைப்பாட்டின் கோட்பாட்டு வழியாக இதை மேலும் நாம் உணர்ந்து கொள்ள முடியும். அதாவது செல்வத்தின் வழியாக வகை ஏற்படும். புலன் இன்பத்தில் ஒளியாக உவகை ஏற்படும். காமப் உணர்ச்சியின் வழியாக ஏற்படும். விளையாட்டின் வழியாக உவகை பிறக்கும். என்று கூறுகின்ற தொல்காப்பியரின் மெய்ப்பாட்டு விதிகளின்படி இங்கே கண்ணப்ப நாயனார் புராணத்தில் பல்வேறு இடங்களில் உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றி நிற்கின்றது. சைவ வழிபாடு மேற்கொண்ட சிவகோசரியார் அடிக்கடி நெடுமூச்சு கொண்டு மெய்ப்பாட்டை வெளிப்படுத்தும் காட்சிகளை பெரியபுராணத்தில் காண முடிகின்றது. பெருமூச்சு விடும் மெய்ப்பாடு என்பது உயிர்ப்பு என்னும் மெய்ப்பாடாக தொல்காப்பியர் கூறுகிறார் (Thamizhannal, 2010). அத்தகைய மெய்ப்பாட்டை இங்கு உணரமுடிகின்றது

கண்ணனாரின் இந்த அற்புத காட்சிகளைக் கண்டு அனைவரும் வியந்து பார்க்கின்ற பொழுது மருட்கை என்னும் வியப்பு மெய்ப்பாடு தோன்ற காட்சிகளை அமைத்துள்ளார் சேக்கிழார். இதனை

"வளத்திருக் கண்ணில் தங்கண் அப்பிய

வள்ளலார் தம் நலத்தினை பின்னும் காட்ட நாயனார்

மற்றைக் கண்ணில்--------"

என்னும் பாடல் வழியாக வலது கண்ணை இறைவனுக்கு பொருத்திவிட்டால் கண்ணப்பநாயனார் இந்த காட்சி வியப்பைத் தருகின்றது. மேலும் இடது கண்ணை இறைவனுக்கு பொறுத்துகின்ற காட்சியின் போது ஏற்பட்ட மெய்ப்பாட்டு உணர்வை கீழே உள்ள பாடலடிகள் உணர்த்துகின்றது

கண்ணுதல் கண்ணில் தம் கண் இடந்து அப்பிற் காணும் நேர்பாடு எண்ணுவார் தம்பிரான் தன் திருக் கண்ணில் இடக்கால் ஊன்றிஎன்னும் பாடல் வழியாக இறைவன் மீது கொண்ட கண்ணப்ப நாயனாரின் அன்பு கருணை பற்று வழியாக மெய்ப்பாட்டு உணர்வை உணர முடிகின்றது. இவ்வாறு கண்ணப்ப நாயனார் புராணத்தில் ஒவ்வொரு காட்சியின் போதும் மெய்ப்பாட்டு சிந்தனைகள் நிரம்ப காணப்படுகின்றன.

## முடிவுரை

பெரியபுராணத்தில் கண்ணப்ப நாயனார் புராணத்தில் மொத்தம் 230 பாடல்களில் தொடர்ந்து வாசிக்கிற பொழுது ஒவ்வொரு பாடலிலும் மெய்ப்பாட்டு சிந்தனைகள் நிரம்ப காணப்படுவதை அறிய முடிகின்றது. நாட்டை அறிமுகப்படுத்துகின்ற பொழுதும் கண்ணப்பனாரின் பிறப்பைப் பற்றி கூறுகின்ற பொழுதும் வியப்பும் மெய்ப்பாட்டை உணரமுடிகின்றது. கண்ணப்பர் தன் படை திறமையை வெளிப்படுத்துகின்ற பொழுதும் காளத்தி மலையில் இறைவனை கண்டு அன்பை வெளிப்படுத்துகின்ற பொழுதும் வியப்பு என்னும் மருட்கை மெய்ப்பாடு வெளிப்பட்டு நிற்கின்றது. காடன் நாணன்

சிவகோசரியாரியரின் பக்தி நிலை ,வேடவர் மக்களின் அணுகுமுறை, அந்த நாட்டு மக்கள் இறைவனின் திருவிளையாடல்கள் அனைத்தும் மெய்ப்பாட்டு காட்சிகளாகவே காணப்படுகின்றது. பெரியபுராணத்தில் கண்ணப்ப நாயனார் புராணம் என்பது அன்பின் திருவுருவமாக கண்ணுக்கு கண் என்னும் கருணை வடிவமாக மெய்ப்பாட்டு உத்திகளை கொண்ட புராணமாக அமைகின்றது.

## References


Sekkilhar (1934) Sekkilhar Peruman Aruliya Periyapuranam ena valanngum Thirurhondar Puranam, Murugavel Puthaga Salai, Chennai, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License